# சங்க இலக்கியங்களில் புறவெளிச் சடங்குகள்

**முனைவர். மா. வள்ளியம்மாள்**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்,**

**ஸ்ரீ பராசக்தி மகளிர்கல்லூரி(த), குற்றாலம் – 627802.**

**மின்னஞ்சல்: kavimagizh999@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

பிறப்பு முதல் இறப்பு வரையிலும் மனிதன் பல்வேறு நிலைகளைக் கடந்து செல்கின்றான். தன் சார்ந்திருக்கும் குழு, மதம், அரசியல், பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் அவனது வாழ்வியல் அமைகின்றது. இந்த வாழ்வியலில் சடங்கு இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. சங்க இலக்கியங்கள் பரவலாக அகச் சடங்குகளும், புறச்சடங்குகளும் சார்ந்த கருத்தாக்கங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. அவற்றில் அகசடங்குகள் சில பொது வெளிக்கு வந்தாலும் போர் பற்றிய சடங்குகள் புறவெளியில்பண்டையகால வீரர்களின் நிலைகளையும், கொற்றவை குறித்த செய்திகளையும், புறத்தே நிகழும் வெறியாட்டு பலியீடுகளையும், நடுகல் குறித்த வெளிப்பாட்டுக் குறிப்புகளையும், இவை போன்று குரவைச் சடங்கு, அவிப்பலி, அழல் புகுதல் போன்றவையும் புறவெளிச் சடங்குகளாகச் சங்க இலக்கியங்களின் தரவுகள் பதிவு செய்திருக்கின்றன.

**முன்னுரை**

சமுதாய உறவுகளினால் கட்டப்பட்ட வெளியே புரவெளியாக அமைகின்றது. புற வாழ்க்கை போரோடு மட்டும் தொடர்புடையது அன்று அது சமுதாய வாழ்வில் சமுதாயத்தின் பொதுத்தளத்தில் சில சடங்குகளை நிகழ்த்துகின்றது. இச்சடங்குகளின் எல்லை விரிந்தது. உறவு வட்டங்களைக் கடந்தது. மனிதன் சமூகத்துடன் கொண்ட தொடர்பினை வெளிபடுத்துவது புறவாழ்க்கையாகும். பழந்தமிழர் தங்களின் புறவாழ்க்கையினைப் பெரும்பாலும் போர் புரிந்து புகழ் விரும்பும் விதத்தில் வாழ்ந்திருகிற்றனர். இத்தகைய குறிக்கோள் வல்வினை விவரிப்பதாக போர் பற்றியச் செய்திகளை தொல் இலக்கண நூலான தொல்காப்பியம் புறத்திணையியலில்விளக்குகிறது. போரின் தொடக்கமாக ஆநிரைகளைக் கவர்தல் மீட்டல் இவ்விரண்டும் வெட்சி எனக் குறிப்பிடுகிறது. எதிரி மன்னனுடைய நாட்டைக் கைப்பற்றப் போர்தொடுப்பதும், அதனை எதிர்த்துப் போர்தொடுப்பதும் வஞ்சித் தினையாகும். பகை கொண்ட மன்னனின் மதிலை முற்றுகையிடுவதும், இம்முற்றுகையை எதிர்த்துத் தாக்குவதும் உழிஞை ஆகும். படையெடுத்து வந்த அரசனின் வலிமையை அழிப்பது தும்பை, பகைவரை வெல்லுதல் வாகை, நிலையாமையைக் கூறுவது காஞ்சி, புகழ்பாடுதல் பாடாண் எனப் போர் செயல்பாடுகளுடன் தொடர்புடவையாக வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வகை, பாடாண் போன்றவற்றை தொல்க்காப்பியம் எடுத்துரைப்பது குறி பிடதக்கதாகும்.

**இனக்குழுக்களின் நிரைகோடல்**

பழங்கால இனக்குழுக்கள் வென்று கைக்கொண்ட ஆநிரைகளைத் தாமே வைத்துக் கொள்ளாமல் தனது குழு சார்ந்த வீரர்களுக்கும் பங்கீடு செய்து கள்ளுண்டுக் கொண்டாடியமைப் புலப்படுத்தும் வகையில் கவர்ந்து வந்த ஆநிரைகளைக் ‘கந்தாரம்’ என்னும் மதுவிற்கு ஈடாக வீரர்கள் பரிமாறிக்கொண்ட நிலையினை

“தெளிப்ப விளைந்த தீம் காந்தாரம்

நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு” (புறம் .258:2-3)

எனவும் ஆநிரைகளை வென்று தாகத்துடன் வரும் வீரனுக்குத் தாகத்தைத் தணிக்கும் விதமாக முதிர்ந்த மதுவை உடைய சாடியைப் பாதுகாத்து வைத்திருந்த செய்திகளை அறிய முடிகிறது.ஆநிரைகளைக் கவர்ந்து வரும் தலைவனுக்கும் அவனது பக்கமாய் வந்துகொண்டு இருக்கும் வீரர்களுக்கும் பந்தல் அமைத்து, மணல் பரப்பி, அவர்கள் உண்ணும் விதமாக ஆட்டுக்கிடாயை வெட்டி மதுவைப் பக்குவமாகப் பிழிந்து வைத்து உண்டாட்டு நடந்தமையை

“நிரையோடு வருஉம் என்னைக்கு

உழையோர் தன்னினும்பெருஞ் சாயலரே(புறம் .262:5-6)”

என்று புறப்பாடல் சான்று பகிர்கிறது. இவ்வாறு நிரைகோடலினால் தலைவனையும் வீரர்களையும் மகிழ்வித்துக் கொண்டாடியதற்கானக் காரணம் ஒரு குறிப்பிட்ட குழுக்கள் தங்களின் உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும். ஆநிரைகளைக் காத்து வளம்பெறவும் நிகழ்த்தியமைப் புலப்படுகிறது.

**கொற்றவைநிலை**

தொல்காப்பியர் நிலத்தினை அடிப்படையாகக் கொண்டு நானிலத்தை வரையறை செய்து அந்நிலங்களுக்குரிய தெய்வங்களாக மாயோன், சேயோன், வேந்தன், வருணன் போன்ற கடவுள்களைக் குறிப்பிடுகிறார்.பாலையினைத் தவிர்த்து நிலங்களை வகைப்படுத்தியிருக்கிறார் என்பதை அவற்றுள்.

“நடுவண் ஐந்திணை நடுவணது ஓழியப்

படுதிரை வையம் பாத்தியா பண்பே”(தொல்.பொருள்.புறத்-2)

என்னும் நூற்பா வழி அறியமுடிகிறது.

பாலைநிலமானது குறிஞ்சியும் முல்லையும் இயல்பிழந்து காணப்படும் நிலை என்பதைச் சிலப்பதிகாரம்

“ முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து

நல்லியல் பிழந்து நடுங்குதுய ருத்துப்

பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்” (சிலம்பு.காடு.64-66)

என இவ்வாறு உரைக்கின்றது.இருப்பினும் பண்டையக் காலத்தில் தாய்த் தெய்வமாக கருதப்பட்டு பாலைநிலத்தின் போர் வழிபடு தெய்வமாகவும் “கொற்றவை” இருந்தமைக்கான சான்றுகளைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்கின்றன. குறிஞ்சிக்குப் புறனாக விளங்கும் வெட்சித்திணையின் பொருட்டு கொற்றவை என்னும் தெய்வத்திற்கு வெற்றியைக் கொண்டாடுவதற்குத் ‘துடிநிலை’ எனவும் துடிகொட்டி வீரர்கள் வழிப்பட்டமையால் ‘கொற்றவை நிலை’ எனவும் தொல்காப்பியர் கூறுகிறார்.

" வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" (திருமு.258)

எனும் பத்துப் பாட்டின் வரிகள் வெற்றித் தெய்வமாகிய வெல்லும் போரையுடைய கொற்றவை மகனே என முருகனைக் குறிப்பிடுகிறது.பாலை நில தெய்வமாகிய கொற்றவையினைக் குறிப்பிடும் வகையில் பெருங்காட்டுக் கொற்றி,சூலி, காடுகிழாள், காடுகாள், கானமர் செல்வி, பழையோள் போன்ற பெயர்களைச் சங்கப் பாடல்கள் பதிவு செய்கின்றன.

வீரம் பொருந்திய போர்க்களப்பயிற்சியில் வழிப்படுதல், பலியீடு செய்தல், வேள்வி நடத்துதல் போன்ற சடங்குமுறைகளைத் தமிழர்கள் கொற்றவைக்கு நடத்தி வழிபட்டதை சங்க பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.கொற்றவைக்கான சடங்கு முறைகளை வகைப்படுத்தலாம். பூந்தொடை விழாச் சடங்கு, மறக்கள வேள்வி, பலிச்சடங்கு, வேண்டுதல் வழிபாட்டுச் சடங்கு போன்றவையாகும். கொற்றவையின் முன் போர்க்களப் பயிற்சி வீரர்கள் அம்புகளை எய்தி விழாயெடுப்பதைப் "பூந்தொடை விழா" என அகநானூறு சுட்டுகிறது.

"தெம்முனை சிதைத்த, கடும்பரிப் புரவி
வார்கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறும் கொல்லோ .................. "(அகம்.187:4-8)

எனப் படைக்கலம் பயிற்சி பெற்ற வீரர்கள் அரங்கேற்றும் விழாவனது கொற்றவையின் முன் புதுமணல் பரப்பிப் பொலிவுடன் நிகழ்த்தப்பட்டமைக்கு இப்பாடல் சான்று பகர்கிறது. போர்வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை கொற்றவையின் முன்னிலையில் என்பது புலனாகிறது. பழந்தமிழ்ச் சமூகத்தில் எத்தகைய வீரர்களாக இருப்பினும் அரங்கேற்றுச் சடங்கு செய்து தேர்ந்தெடுக்கப் பட்டனர் என அறிய முடிகிறது.

போரின் பொருட்டு போர்க்களத்தில் வேள்வி செய்து கொற்றவியனை வழிபட்டமையினை

"வேள்வியில் கடவுள் அருந்தினை கேள்வி
உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை
வணங்கிய சாயல்........"(பதிற்.70:18-20)

என்ற பதிற்றுப்பத்துப் பாடலின் வழி அறிய முடிகிறது.பகைவரை வென்று செய்யும் கள வேள்வியில் காப்பு அணிந்து, பயன் ஆராய்ந்து போரின் விளைவால் நிமித்தம், பலிக்கடன், ஆகியவற்றை கொற்றவைக்கு நேர்ந்து கொண்டதை

"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்" (குறு.218:1-3)

என்னும் பாடல் வரிகள் குறிப்பிடுகிறது.சேரர்கள் அயிரை மலைக் கொற்றவையை வழிபட்டனர்.பகைவரது இரத்தத்தைச் சோற்றுக் குவியலுடன் கலந்து பலிச்சடங்கினைச் செய்தனர்.வீரர் தம் மார்புப் புண்ணில் ஒழுகும் இரத்தத்தைத் தெளித்து வழிபட்டனர்.எனும் செய்திக்களை பதிற்றுப் பத்தின் (88:11-14) வரிகள் விளங்குகின்றன.சேர வேந்தரும் குறுநில மன்னரும் திரண்ட குருதிச் சோற்றனை பரவிப் பலியீடு செய்தமையை இங்கு அறியமுடிகிறது.

போருக்குச் சென்ற தலைவன் வெற்றியுடன் மீண்டு விரைவில் வரவேண்டுமென கொற்றவையை வேண்டி வழிபடுதல் தொடர்பாக

"புலம்பொடு வதியும் நலம்கிளிர் சரிவைக்கு

இன்னா அரும்படர் தீர, பிறல் தந்து

இன்னே முழக தில் அம்ம"(நெடு.166-168)

என்று அரசமாதேவியின் வருத்த மிகுதியைக் கண்டு தலைவன் விரைந்து வருவதற்காகப் போர்த் தெய்வத்தை நோக்கி முறையிட்டு செவிலித்தாய் புலம்பி வழிபடுவதாக இக்குறிப்பு உள்ளது.வீரர்கள் போருக்குச் செல்லும் பொருட்டும், சென்று வென்று வந்த பின்னரும் கொற்றவையைப் பல சடங்குகள் செய்து வழிபட்டதோடு வீரர்கள் குறித்த நேரத்தில் தன் நாட்டையும் இல்லத்தையும் வந்தடைய வேண்டும் என்ற நிலையிலும் கொற்றவைக்கான வழிபாடு நடத்திருப்பதைத் தெளிய முடிகிறது. இவ்வாறு இனக்குழுச் சமூகத்தில் தாய் தெய்வமாக தோன்றி வளர்ந்து பின்னர் வீர மரபிற்குரிய வழிபாடாக 'கொற்றவை வழிபாடு நிகழ்ந்து, சடங்குகளை ஏற்படுத்தியமை புலனாகிறது.

**புற வெறியாட்டுச் சடங்கு**

அக பாடல்களில் தலைவியின் மாறுபாடு கண்டு செவிலித்தாயால் நிகழ்த்தப்படும் வெறியாட்டில் சில சடங்குமுறைகள் இருப்பினும் புற வெறியாட்டில் வேலனானவன் சில தெய்வக் கடன்களையும் உயிர்ப்பலிகளையும் செய்துள்ளமையைக் காணமுடிகிறது. தொல்காப்பியம் காமவேட்கையின் பொருட்டுப் பெண்ணின் மனநிலையினை அறியும் வெறி

யாட்டினைப் புறத்திணைத் துறையில் ஒன்றாகக் கூறுவது இங்கு உற்று நோக்கத்தக்கதாகும். வெறியாட்டில் நிகழுமிடத்தில் இன்னின்னப் பொருள்களைப் படையலிட்டு முருகனை வழிபடும் விதமாக நேர்ந்து கொள்ளும் முறையினைத் தெய்வக்கடன் வெறியாட்டு எனக் கூறலாம். வெறியாட்டின் நிமித்தம் காந்தள் மலரையும், செந்நெல் அரிசிப் பொறியையும், கள் மற்றும் ஆட்டுக் குட்டியையும் செவிலி தலைவிக்கு உற்ற நோயினைப் போக்கும் விதமாக இப்பொருட்களைத் தெய்வத்திற்குக் கடனாகச் செலுத்தி வெறியாட்டு நிகழ்த்தினால் என்பதை நற்றிணைப் பாடல் 34(1-9)வரிகள் தெரிவிக்கின்றது.

வெறியாடும் பொழுது ஆட்டுக்குட்டியைப் பலியிடுதல் சங்கச் சமூக மரபாகும். தலைவியின் இயல்பு நிலையில் வேறுபாடு கண்ட செவிலி வேலணை அழைத்து பலி கொடுத்து வெறியாட்டு நிகழ்த்தியமையை

"சிறுகுளகு அருந்து தாய்முலை பெறாஅ

மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி

ஏதில் வேலன் கோதை துயல்வரத்

தூங்கும் ஆயின் , அதூஉம் நாணுவல்" (அகம். 292:4-7)

இப்பாடல் புலப்படுத்துகிறது.

தாயின் அரவணைப்பில் மெல்லிய தளிராகிய தழைகளை மட்டுமே உண்ணக்கூடிய இளம் ஆட்டுக்குட்டியைச் செவிலி மாலையணிந்த மார்பினை உடைய வேலனிடம் வெறியாட்டில் பலியீடு செய்வதற்காகக் கொடுத்தச் செய்தி புலனாகிறது தோழி, தலைவியிடம் உன் பசலையின் காரணமாக அன்னையின் வேண்டுகோளுக்கு இணங்கி முருகவேளை வணங்கி வெறியாட்டுச்

சடங்கில் மறியை அறுத்து பலியீடு செய்தாள் செவிலி என்று கூறுகிறாள். இதன் மூலம் வேலன் எனப்படுபவன் ஆவேசத்துடன் வேலினைக் கையில் கொண்டு மாலை அணிந்த கழுத்துடன் மறி பலியீடு செய்து வழிப்பட்டமைப் புலப்படுகிறது. மறி பலியின் பொருட்டு வெளிப்படை குருதியினைத் தினை அரிசி மற்றும் பூக்களைக் கலந்து தூவி வழிபட்டமையை

" களம் நன்கு இழைத்து, கண்ணிக்சூட்டி
வளநகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து
உருவச் செந்தினை குருதியோடு தூஉய்
முருகு ஆற்றுப்படுத்த உருகெழு நடுநாள்
ஆரம் நாற, அருவிடர்தீ ததைந்த
சாரர் பலிபூ வண்டு படச்சூடி"(அகம்.22:8-13)

என்னும் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றன. வேலன் வெறியாட்டு இங்குப் புறம் சார்ந்த சடங்காகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ஆனால் நிகழ்வு அகம் சார்ந்தது என்பது கவனத்திற்குரியது. அகம் சார்ந்த நிகழ்வு ஏன் புறம் சார்ந்த சடங்காகப் பேசப்படுகின்றது என்பது ஆய்விற்குரியது. அகம் சார்ந்த வெறியாட்டில் பெண்ணின் மன நிலைமையை அறிவது முதன்மைக் காரணமாகின்றது. அகம் சார்ந்த வெறியாட்டின் மூலம் எவ்விதப் பயனும் எய்தப்படவில்லை எனில் அது புறம் சார்ந்த வெறியாட்டிச் சடங்காக மாறும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. இப்போது இச்சடங்கு குடும்ப வெளிக்கு வெளியே வருகின்றது. முருகனுக்குப் படையலிடுதல், உயிர்ப்பலியிடுதல் என அதன் தளம் விரிவடைகின்றது. மேலும் இது முருகனின் வலிபாட்டிடத்தில் நிகழ்த்தப் படுவதாக இருப்பதால் குடும்பத்திற்கு வெளியில் இருப்பவர்களுக்கும் அறியும் வாய்ப்பளிக்கின்றது.

**நடுகல் குறித்த சடங்குகள்**

சங்க கால இனக்குழு மக்கள் நடுகல்லினைத் தெய்வ நிலைக்கு உட்படுத்திச் சடங்குகள் மேற்கொண்டுள்ளனர். தான் விரும்பியவாறு வீர மரபினைக் காக்கும் பொருட்டு அக்கால மக்கள் நடப்பட்ட கல்லிற்கு இறைத்தன்மை கிடைக்கப்பெற வேண்டுமென்பதற்காக மயில் தோகைகளை அணிசூட்டி, துடியென்னும் தோற்கருவியை இசைத்து நெல்லினால் உண்டாக்கப்பட்ட கள்ளினைப் பலி கொடுத்து சடங்கு செய்வித்துள்ளனர். இக்கல்லின் அருகே வீரத்தின் அடையாளமாக 'வேல்' ஊன்றப்பட்டு, கிடுகு என்று அழைக்கப்படும் கேடயத்தினை வைத்து வழிபட்ட செய்தியினையும் சங்கப்பாக்கள்

" பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல் வேலூன்று பலகை " (அகம் . 131)

என்று பதிவு செய்கின்றன. சீறூர் அருகே உள்ள நடுகல்லுக்குப் பலியைப் படைத்து அக்கல்லினை நீராட்டி, நெய் கொண்டு விளக்கேற்றி நறுமணம் வீசக்கூடிய புகையினையிட்டு வழிப்பட்டமையை புறப்பாடல்(329.1-5) என்ற வரிகள் சான்று பகர்கின்றது. நடுக்கல்லிற்கு பனையோலையினால் அலங்கரித்து இலைகளை மாலையாக அணிவித்து, யாழ் போன்ற இசைக்கருவி கொண்டு பாடல் இசைத்து சடங்கு நிகழ்த்தியமையினை

" சொல்லா நல்லிசைச் பெயரோடு நட்ட
கல்லேசு கவலை எண்ணுமிகப் பலவே
இன்புறு முரற்கைநும் பாட்டு விருப்பாகத்

தொன்றோழுகு மரபினும் மருப்பிடுத்துத் துனைமின்" ( மலைபடு. 388-391)

என்னும் பாடலடிகள் உரைக்கின்றன. இறந்தோரை நினைவுபடுத்தும் நடுகல் வழக்கமானது அக்கால சமூகத்திடையே சடங்கார்ந்த நிகழ்விற்கு அடிகோலியது என்பது தெளிவாகிறது. ஆதிரைக் கவர்தல், மீட்டல் போரில் கொல்லப்படும் வீரர்களுக்கே நடுகல் வழிபாடு இருந்தது என்பதைச் சங்க இலக்கியப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. மன்னர்களின் நிலம் கவர் போரில் ஈடுபட்டுக் கொல்லப்பட்ட வீரர்களுக்கு நடுகல் அமைத்தமைக்கானச் சான்றுகள் கிடைக்கப்பெறவில்லை.

**கற்வியல்கள்**

நடுகல்லைப் போன்று இறைந்தோரைப் புதைத்து வைத்த பதுக்கைகளில் உள்ள ஆவிகளையும் வழிப்பட்டனர் பழந்தமிழ் மக்கள். சங்கப் பனுவல்கள் 'பதுக்கை' என்று கூறப்படும் கற்குவியல்கள் குறித்துப் பேசுகிறது. பாலைநில எயினர்கள் வழிச் செல்வோரைக் கொன்று அப்பிணங்களைக் கற்கள் கொண்டு மூடி வைத்த செய்தியினை

"வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்

ஆள் அழித்து உயர்ந்த அஞ்சவரு பதுக்கை" (அகம்.215:10-11)

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. கற்குவியல்கள் தழைகளைக் கொண்டு மூடி உயர்ந்து காணப்பட்ட நிலையாக அவை இருந்தன. பரல் போன்ற அமைப்பினைப் பெற்று இருந்தமையையும் அறிய முடிகிறது. இதனுள் இருக்கும் இறந்தோரை வழிபடும் விதமாக பதுக்கைக்கு அருகில் நடுகல் நட்டு செம்மறிக் குட்டியைப் பலியாகக் கொடுத்து கடவுளைப் போன்று சடங்கு நிகழ்த்தினர் எயினர்கள் என்பதை

"வில்ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்

வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேண்மார்"(அகம்.35:6-7)

என்னும் அகநானூற்றுப் பாடலடிகளால் அறிய முடிகின்றது.

மானத்தின் பொருட்டு நோன்பு இருந்து இறந்தோர்க்குச் சங்க காலத்தில் நடுகல் எடுக்கப்பட்ட நிலையினைப் புறநானூறு பதிவு செய்கிறது

" நனந்தலை யுலக மரந்தை தூங்கக்

கெடுவி னல்லிசை சூடி

நடுக லாயினன் புரவல ளௌனவே" (அகம்.221:11-13)

என்று, கோப்பெருஞ்சோழனுக்கு நடுகல் எடுத்து மயில் பீலிசூட்டி விழாவெடுத்த நிகழ்வினைப் பற்றிக் கூறுகிறது. போர் மறவர்க்கு மட்டுமின்றி மானம் காத்து இறந்தோர்க்கும் நடுகல் நடப்பட்டு வழிபட்ட வழக்கத்தினை அறிய முடிகின்றது.

**தேர்க்குரவைச் சடங்கு**

குரவையாடல் மன்றங்களில் மகளிரால் நிகழ்த்தப்படுவதாகும்.இத்தகைய ஆடல் போர்க்களத்தில் வெற்றி கொண்ட மன்னனின் தேரின் முன் மகளிராலும், தேரின் பின் கொற்றவையினுக்குக் காவலாய் இருக்கும் பெய்களாலும் நிகழ்த்தப்பட்டச் சடங்கினைச் சங்கப் பாக்கள் கூறுகின்றன. பதிற்றுபத்து முன் தேர்க்குரவையாடலை

" வேந்து மேயீம் மறந்து வாழ்ச்சி

வீந்து உகு போர்க்களத்து ஆடும் கோவே(பதிற்:56:7-8)

என்று வென்ற அரசன் தன் படை வீரர்களுடன் வெற்றிக் களிப்பில் குரவையாடிய செய்தியினைக் கூறுகிறது.பின் தேர்க்குரவையாடலை

"உருகெழு பேய்மகள் அயர

குருதித்துகள் ஆடிய களம் கிழவோயே"(புறம்.371:6-7)

எனக் கொற்றவையை மகிழ்வித்து சடங்கு செய்தமையைக் காண முடிகின்றது. அதாவது நெடுஞ்செழியன் தன் பகைவரைக் குறை உடல்களாய் போர்க்களத்தில் கொன்று குவித்து பேய்கள் உண்ணும் அளவினதாய் உண்டு, ஆடிக்களிப்பில் அரசனின் தேரின் பின் குரவையாடியதாக இச்செய்தியின் வழி உணர முடிகின்றது.பகைவரை வெற்றி கொண்ட வேந்தனைச் சிறப்பிக்கும் விதமாக பலர் கூடுகின்ற மன்றத்தில் மகளிரால் நிகழ்த்தப்பட்டு தேரினைச் சிறப்பிக்கும் பொருட்டு குரவையாடல் நடந்தேரியிருக்கின்றன.இச்சடங்கு தேரின் முன் நிகழ்த்தப் பட்டதையும் தெளிய முடிகின்றது. போர்க்களத்தில் வீழ்ந்துபட்ட வீரர்களின் உடல்களைக் கொற்றவையின் ஆணைப்படி பேய்கள் உண்டு களிப்பினால் அரசனுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் அவனது தேர்ப்பின்னே குரவையாடிச் சென்றமையும் விளங்க முடிகிறது. வேந்தனின் வெற்றிப் பெருமையைக் கூறும் விதமாகவே பின் தேர்க்குரவை உள்ளது. ஏனெனில் உண்டு கழித்த நிகழ்வு கற்பனைக்கு இடமளிக்கிறது. போர்த்திறனை வெளிப்படுத்தும் நிலையில் இச்சடங்கானது பேசப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அவிப்பலி**

வீரன் தன் தலைவன் வெற்றிபெறத் தானே முன்வந்து தன் உயிரைப் பலியாகக் கொடுப்பான். இதனைக் 'அவிப்பலி' என்பார் தொல்காப்பியர், (தொல்.பொருள்.75)

போர்க்களத்தில் வீரர்கள் வெற்றி வேண்டி போர்க்கடவுளுக்குத் தங்களைப் பலியிட்ட வழக்கம் நிலவியுள்ளமைப் புலப்படுகிறது.

**எரிபுகுதல் சடங்கு**

கணவனை இழந்த மனைவி, அவளுடைய கணவனின் சடலத்தை எரிக்கும் நெருப்பில் தானும் எரிபுகுதல் 'அழல் புகழ்' என்னும் நிலையாகும். பெருங்கோப்பெண்டு தன் கணவன் பூதப் பாண்டியனின் எரியும் அழலில் வீழ விரும்புகிறேன், என்றும் கைம்மை நோன்பின் கொடுமைகளைக் காட்டிலும் அழல்புகுதல் சிறந்ததென்று கூறும் விதத்தில் புறப்பாடல்(புறம்.246.11-15) சான்று பகிர்கிறது. பெண் கைம்மையின் பொருட்டு சில குறியீடுகளைச் சமூகத்தால் ஏற்றுக்கொண்டு இருந்ததன் காரணத்தினால் அழல் புகுதலுக்கு உட்படுகிறாள். மங்கலக் குறியீடாக இருக்கும் வளையல், கூந்தல், உறவு எனச் சிலவற்றை மாறுபடுத்தும் இயல்பே எரிபுகுதலுக்கு வித்திட்டது எனலாம்.

**முடிவுரை**

அகவாழ்வு சார்ந்த கூறுகள் பொது வெளிக்கு வரும்போது அது புற ச்சடங்காகக் கருதப்படுகின்றது என்பதற்கு வேலன் வெறியாட்டுச் சான்றாக அமைகின்றது.ஆநிரைக் கவர்தல், மீட்டல் போரில் கொல்லப்படும் வீரர்களுக்கே நடுகல் வழிபாடு இருந்தது என்பதைச் சங்க இலக்கியப்பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. போர்ச்சடங்கில் கொற்றவை வழிபாடு மிக இன்றியமையாத இடத்தைப்பெற்றிருந்தது என அறிய முடிகின்றது.திணைகளின் முதன்மைத் தெய்வங்களில் தொல்காப்பியர் கொற்றவையைக் குறிப்பிடாவிட்டாலும் போர் தொடர்பான அசை

வியக்கங்களில் கொற்றவை தவிர்க்க இயலாத இடத்தைப் பெற்றுள்ளது என்பதைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.வீரர்கள் போருக்குச் செல்லும் பொருட்டும் சென்று வந்த பின்னரும் கொற்றவையைப் பல சடங்குகள் செய்து வழிபட்டதோடு வீரர்கள் குறித்த நேரத்தில் தன் நாட்டையும் இல்லத்தையும் வந்தடைய வேண்டு என்ற நிலையிலும் கொற்றவைக்கான வழிபாடு நடந்திருப்பதைத் தெளிய முடிகிறது.

நடுகல், பதுக்கை இவை இரண்டும் வெவ்வேறு மரபு சார்ந்தவை. நடுகல் ஆநிரை போரோடு தொடர்புடையதாகத் தோற்றம் பெற்றது, பதுக்கை ஆறலைக் கள்வர்களால் கொள்ளப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்டவை. குரவைச் சடங்கு, அவிப்பலி, அழல் புகுதல் ஆகியவை போர் ஓர் அமைப்பாக உருவாகிய பின்னர் தோன்றிய மரபுகளாக இருக்கின்றது என்பதைத் தெளியமுடிகிறது. மக்களின் வாழ்க்கை முறைகளைப் பண்பாட்டுநிலையில் சடங்குகள் பற்றிய புரிதல்களையும் வகைப்பாடுகளையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.பண்டைய காலத் தமிழ் மக்களின் எண்ணற்ற விழுமியக் கூறுகளில் சடங்குகளும் இன்றியமையாத ஒன்றாக இருந்தமையினைச், சங்க இலக்கியத் தரவுகளின் வழியாக புரிந்து கொள்ள முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்.**


1. இளம்பூரணர் (உ.ஆ)2016 தொல்காப்பியம், பொருளதிகாரம் சாரதா பதிப்பகம்,சென்னை – 14.
2. கைலாசபதி,க.1991 பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.
3. கோவிந்தன்,க.1984 பண்டைத் தமிழர் போர்நெறி, ஸ்ரீ கோமதி பதிப்பகம்,சென்னை – 5
4. பகத்வத்சல பாரதி 2005 சமூக பண்பாட்டு மானிடவியல், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.
5. சிவத்தம்பி கா.2003 பண்டைத் தமிழ்ச் சமூகம், வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு, சென்னை.